தில்லைத் திருவம்பலச்

சக்கரம்



வெளியீடு :

கோட்டையூர் அ. அ. ராம. சுப்பய்யா செட்டியார்

24-12-69.

கிருஷ்ணா பிரஸ், அய்யம்பேட்டை.

உ


தில்லைத் திருவம்பலச் சக்கரம்.

வெளியிட்டாளர்:

கோட்டையூர். அ. அ. ராம. சுப்பய்யா செட்டியார்.

சௌமிய - மார்கழி

1969



சேர்க்கும் துடிசிகரஞ் சிக்கனவா வீசுகரம்
ஆர்க்கும் யகரம் அபயகரம் — பார்கிலிறைக்(கு)
அங்கி நகரம் அடிக்கீழ் முயலகனுர்
தங்கும் மகரமது தான்

உண்மை விளக்கம் 33.

உ
சிவமயம்

முகவுரை.

சிவநேயச் செல்வர்களே! வணக்கம். எந்நாட்டவர்க்கும் இறையாம் தென்னாடுடைய சிவன்றன் திருவருளாற் "சிதம்பரம் ஸ்ரீ ஆனந்த நடராஜர் திருவம்பலச் சக்கரப் பூஜைப்பாமாலை" என்னும் இத்துதிமாலையை யான் மகிழ்வுடன் வெளியிடலானேன்.

மனிதன் தன்முனைப்பால், பந்தபாசத்தால், ஆணவமலக்கட்டால், மாயாகாரியத்தால் நெறியல்லா நெறியிற்சென்று உய்வகையறியாது இருள் என்னும் நரகில் வீழ்ந்து இன்னல் உறும் நிலையில் எம்பெருமான் கருணைப்பெருக்கால் அவன் நன்னிலையெய்த எழுந்த அருள்நூல்கள் அளவில. பொய்யும் வஞ்சகமும் சினமும் காமமும் மந்தமும் சுயநலமும் பொருந்திய உலகவாழ்வினின்றும் மெய்யும நேர்மையும் சாந்தமும் அடக்கமும் உழைப்பும் பரநலமும் அமைந்த நல்லுலகத்திற்கு அவ்வருள் நூல்கள் மனிதனை அழைத்துச்செல்கின்றன என்பது யாவரும் அறிந்த உண்மையன்றோ! பள்ளத்தின் வழியிற் புனல் பாய்ந்தோடுவதுபோல் அவ் அருள் நூல்களின்வழி உள்ளம் நெகிழ்ந்து ஓடலே பிறவிப்பயனும்.

"சிவத்தைப் பேணில் தவத்தைப் பேணு" என்பர் ஆன்றோர் நல்வினையாலும் என்முன்னையோர் செய்த நற்றவப்பயனாலும் மூவாமுதலை நிர்க்குண சொருபியை பாசமற்றபரஞ்சோதியை வந்தித்து வழுத்தும் பெரும்பேற்றையான் பெற்றேன். "யான் பெற்ற இன்பம்பெறுக இவ் வையகம்" என்பது ஆன்றோர் வாக்கு.

யான் நினைவறிந்த நாள்முதல் இயற்றிவரும் பவம் அகற்றும் சிவத்தொண்டின் சிறப்பாலும், குறைவகற்றும் இறைவழிபாட்டாலும், நித்தியமாம் ஆன்மீக வளர்ச்சியாலும், சுவானுபவச் செல்வத்தாலும் விக்ருதி ஆண்டு ஆனித்திங்கள் ஒருநாள் வைகறையிற் கனநிலையில் தியானம் பூர்த்தியாகி சூட்சமசரீரம் வெளிப்பட்டு ஜோதிதரிசனம் கிடைத்த விசேடத்தாலும், அவ்வாறே அவ்யாண்டு மாசித்திங்கள் 22 ஆம் நாள் மகாசிவராத்திரி நன்னாளிற் கூட்டுப்பிரார்த்தனையிற் கிடைத்த குறிப்பினாலும், சிதம்பர ரகசியம் என்னும் இத்திருவம்பலச் சக்கர வழிபாட்டைக் குன்றக்குடி தவத்திரு. ஸ்ரீ-ல-ஸ்ரீ தெய்வசிகாமணி அருணாசல தேசிக சுவாமிகள் அவர்கள் திருமுன்னிலையில் 6—3—51 செவ்வாய்க்கிழமை அன்று அனுஷ்டிக்கத் தொடங்கினேன்.

உலகம் முழுவதும் அன்புவெள்ளம் பெருகி அருட்பயிர் தழைத்து சிவானந்த பேரின்பம் முதிர்தல் வேண்டும் என்பது என் உட்கிடை.

இந்நூலின்கண் திருமந்திரம் என்ற நூலை யான் பல்வகையால் ஆராய்ந்து சிதம்பரரகசியம் என்னும் திருவம்பலச்சக்கரத்தை படம் வரைந்து காட்டியுள்ளேன்

சிதம்பரரகசியம் என்னும் இத்திருவம்பலச் சக்கரத்தைப் படத்திற்கண்டது [பக்கம்] போல் தாமிரத் தகட்டில் வரைந்து வைத்துக்கொண்டு ஒவ்வோர் ஆண்டும் மார்கழித்திங்கள் சதயநன்னுள் அன்று காப்புக் கட்டல்வேண்டும். அடுத்துவரும் திருவாதிரை நன்னுள் அன்று ஸ்ரீ நடராஜ மூர்த்திக்கும், ஸ்ரீ சிவகாமி அம்மைக்கும், ஸ்ரீ மாணிக்கவாசகருக்கும் ஸ்ரீ சிதம்பரச்சக்கரத்திற்கும் அபிடேகம் செய்தல்வேண்டும். பின்னர் சந்தனம், அகிற்கட்டை, பச்சைக் கருப்பூரம், பன்னீர், குங்குமப்பூ ஆகியவற்றை அரைத்துச் சக்கரத்திற் பூசிவிடல் வேண்டும். அப்பால் சிதம்பரச்சக்கரத்தை ஆசனத்தின்மேல் பட்டுப்போட்டு வைத்து எண்திசைகட்கும் எட்டொரு மூக்குத்திபம் உள்முகமாக சக்கரத்தை நோக்கி ஏற்றி நிவேதனத்துடன 8000 ஜபம் செய்து வழிபடல்வேண்டும். பூசை முடிந்தவுடன் சக்கரத்தை உட்புறம் செகப்பும் வெளிப்புறம் கறுப்பும் உள்ள திரையால் மூடிவைத்தல் வேண்டும். (தினந்தோறும் சக்கரத்திற்குக் காலை மாலை களில் தீபம்ஏற்றி நிவேதனத்துடன் வழிபட்டு பஞ்சாட்சர ஜபம் செய்து வருவது உத்தமம்) இதுதான் யான் சக்கரத்தை வழிபடும் முறை. இம்முறையில் வழிபாடாற்றினுல் பழவினைகள் பாறும் வண்ணம் பத்திநெறி யறிவித்துச் சித்தமலம் அறுவித்துச் சிவமாக்கி எனையாண்ட அத்தன் அருட்செல்வத்தையும் பொருட்செல்வத்தையும் வாரிவழங்குவன் என்பது திண்ணம்.

இப்பாமாலையில் திருவாதிரைத் திருநாள் முதல் புஷ்பாஞ்சலி ஈருகப் பத்து பகுப்புகள் அடங்கியுள்ளன. ஒவ்வொரு பகுப்பிலும் திருமுறை நூல்களினின்றும் பொருட் சிறப்பமைந்த பாசுரங்களைத் தொகுத்து உள்ளேன், ஏனெனில் திருமுறை நூல்கள் நம்முடைய அழியாக் கருவூலங்கள் அன்ருே, பரிபக்குவம் எய்திப் பூசைமேல் ஆசை வைத்துப் புலனடக்கி ஐந்தவித்தான் திருவடிச் செல்வத்தைப் பெற்றின்புறுவதே மெய்யன்பர் கடனும்.

இச்சிறுநூலைச் சைவஉலகம் மகிழ்வுடன் வரவேற்று என்னைக் கடைக் கணிப்பதாகுக.

திருச்சிற்றம்பலம்.

மெய்யன்பன்,

21—5—69 }
திருவையாறு. }

அ. அ. ராம. சுப்பய்யா செட்டியார்,
பெத்தாச்சி செட்டியார் தெரு,
கோட்டையூர்.

உ
சிவமயம்

திருவாதிரைத் திருநாள்

ஒவ்வோர் ஆண்டும் மார்கழித்திங்கள் சதயநட்சத்திரம் தொடங்கித் திருவாதிரை நட்சத்திரம் வரையில் திருவாதிரைத் திருநாள் கொண்டாடப்படல் வேண்டும்.

கொண்டாடும் முறை :-

1. முதல்நாள் திருவெம்பாவையும், திருப்பள்ளியெழுச்சியும், பன்னிருதிருமுறைகளும் ஓதி ஒவ்வொருபாட்டிற்கும் தீபாராதனைக் காட்டல்வேண்டும். பின்னர் பன்னிரு திருமுறைகளையும் திருக்கடைக் காப்பிடல்வேண்டும்.
2. திருவாதிரை நன்னாள்வரையில் திருவெம்பாவை, திருப்பள்ளியெழுச்சிப் பாக்களை நாடோறும் படித்து வரல் வேண்டும்.
3. திருவாதிரை நன்னாள் அன்று திருவெம்பாவை, திருப்பள்ளியெழுச்சிப் பாக்களைப் படித்துப் பன்னிரு திருமுறைகளையும் ஓதி ஒவ்வொருபாட்டிற்கும் தீபாராதனைக் காட்டல் வேண்டும்.
4. உபதேசம் கேட்டவர்களே பூஜைசெய்யுந் தகுதியைப் பெற்றவராவர்.

"நாதன் நாமம் ஓம் நமசிவாய"
"சூட்சம பஞ்சாட்சரம் ஓம் சிவாயநம"
"அதிசூட்சம பஞ்சாட்சரம் ஓம் சிவ ய சிவ"

5. குறிப்பு

நம சிவாய எனக்கீழிருந்து மேல்நோக்கியும், சிவாய நம என மேலிருந்து கீழ்நோக்கியும், ஓம் எனவட்டம் இட்டும் முறையே தீபம் பார்த்தல்வேண்டும்

6. "திருவாய் பொலியச் சிவாய நம என்று
திருநீறு அணிந்து வரல் வேண்டும்."

7. ஒரு வருஷம் தேவர்களுக்கு ஒருநாளாதலின் தேவபூஜையாக மார்கழித் திருவாதிரை அபிஷேகம் விடியற்காலமாகவும், மாசிச் சதுர்த்தசி அபிஷேகம் காலசந்தியாகவும், சித்திரைத் திருவோண அபிஷேகம் உச்சிக்காலமாகவும், ஆனிஉத்தர அபிஷேகம் திருவந்திக் காப்பாகவும், ஆவணிச்சதுர்த்தசி அபிஷேகம் இரண்டாங்காலமாகவும், புரட்டாசிச் சதுர்த்தசி அபிஷேகம் அர்த்தசாமமாகவும் ஆக அபிஷேகங்கள் ஆறு நடைபெறுகின்றன. இதனை,

" சித்திரையில் ஓணமுதல் சீரானி உத்தரமாம்
சத்ததனு வாதிரையும் சார்வாகும் — பத்தி
மாசியரி கன்னி மருவு சதுர்த்தசிமன்(று)
ஈசாபி டேகதின மாம். "

8. திருவம்பலச் சக்கரத்தில் நடுவில் பிரணவத்திற்குப் புள்ளி இல்லை என்பதே ரகசியம். — திருமந்திரம் 921. பார்க்க

உ
சிவமயம்

பகுதி எண் 1. திருவெம்பாவை.

திருச்சிற்றம்பலம்

1 ஆதியும் அந்தமும் இல்லா அரும்பெருஞ்
சோதியை யாம்பாடக் கேட்டேயும் வாள்தடங்கண்
மாதே வளருதியோ வன்செவியோ நின்செவிதான்
மாதேவன் வார்கழல்கள் வாழ்த்திய வாழ்த்தொலிபோய்
வீதிவாய்க் கேட்டலுமே விம்மிவிம்மி மெய்ம்மறந்து
போதார் அமளியின்மேல் நின்றும் புரண்டிங்ஙன்
ஏதேனும் ஆகாள் கிடந்தா ளென்னேயென்னே
ஈதே யெந்தோழி பரிசேலோ ரெம்பாவாய்.

2 பாசம் பரஞ்சோதிக் கென்பாய் இராப்பகல்நாம்
பேசும்போ தெப்போதிப் போதார் அமளிக்கே
நேசமும் வைத்தனையோ நேரிழையாய் நேரிழையீர்
சீசி யிவையுஞ் சிலவோ விளையாடி
ஏசு மிடமீதோ விண்ணோர்க ளேத்துதற்குக்
கூசு மலர்ப்பாதந் தந்தருள வந்தருளுந்
தேசன் சிவலோகன் தில்லைச்சிற் றம்பலத்துள்
ஈசனார்க் கன்பார்யாம் ஆரேலோ ரெம்பாவாய்.

3. முத்தன்ன வெண்ணகையாய் முன்வந் தெதிரெழுந்தென்
அத்தன் ஆனந்தன் அமுதனென் றள்ளூறித்
தித்திக்கப் பேசுவாய் வந்துன் கடைதிறவாய்
பத்துடையீர் ஈசன் பழஅடியீர் பாங்குடையீர்

புத்தடியோம் புன்மைதீர்த் தாட்கொண்டாற் பொல்லாதோ
எத்தோநின் அன்புடைமை எல்லோம் அறியோமோ
சித்தம் அழகியார் பாடாரோ நஞ்சிவனை
இத்தனையும் வேண்டும் எமக்கேலோ ரெம்பாவாய்.

4. ஒள்நித் திலநகையாய் இன்னம் புலர்ந்தின்றோ
வண்ணக் கிளிமொழியா ரெல்லாரும் வந்தாரோ
எண்ணிக்கொ டுள்ளவா சொல்லுகோம் அவ்வளவுங்
கண்ணைத் துயின்றவமே காலத்தைப் போக்காதே
விண்ணுக் கொருமருந்தை வேத விழுப்பொருளைக்
கண்ணுக் கினியானைப் பாடிக் கசிந்துள்ளம்
உள்நெக்கு நின்றுருக யாம்மாட்டோம் நீயேவந்
தெண்ணிக் குறையில் துயிலேலோ ரெம்பாவாய்.

5 மாலறியா நான்முகனுங் காணா மலையினைநாம்
போலறிவோ மென்றுள்ள பொக்கங்க ளேபேசும்
பாலூறு தேன்வாய்ப் படிறீ கடைதிறவாய்
ஞாலமே விண்ணே பிறவே அறிவரியான்
கோலமும் நம்மைஆட் கொண்டருளிக் கோதாட்டுஞ்
சீலமும் பாடிச் சிவனே சிவனேயென்
றோலம் இடினும் உணராய் உணராய்காண்
ஏலக் குழலி பரிசேலோ ரெம்பாவாய்.

6. மானேநீ நென்னலை நாளைவந் துங்களை
நானே யெழுப்புவன் என்றலும் நாணாமே
போன திசைபகரா யின்னம் புலர்ந்தின்றோ
வானே நிலனே பிறவே அறிவரியான்
தானேவந் தெம்மைத் தலையளித்தாட் கொண்டருளும்
வான்வார் கழல்பாடி வந்தோர்க்குன் வாய்திறவாய்
ஊனே உருகா யுனக்கே உறும்எமக்கும்
ஏனோர்க்குந் தங்கோனைப் பாடேலோ ரெம்பாவாய்.

7. அன்னே இவையும் சிலவோ பல அமரர்
உன்னற்கு அரியான் ஒருவன் இருஞ்சீரான்
சின்னங்கள் கேட்பச் சிவனென்றே வாய்திறப்பாய்
தென்னாஎன் னாமுன்னம் தீசேர் மெழுகுஒப்பாய்
என்னானை என்னரையன் இன்னமுதுஎன் றெல்லோமும்
சொன்னோம்கேள் வெவ்வேறாய் இன்னம் துயிலுதியோ
வன்னெஞ்சப் பேதையர்போல் வாளா கிடத்தியால்
என்னே துயிலின் பரிசுஏலோர் எம்பாவாய்.

8. கோழி சிலம்பச் சிலம்பும் குருகுஎங்கும்
ஏழில் இயம்ப இயம்பும்வெண் சங்குஎங்கும்
கேழில் பரஞ்சோதி கேழில் பரங்கருணை
கேழில் விழுப்பொருள்கள் பாடினோம் கேட்டிலையோ
வாழிஈது என்ன உறக்கமோ வாய்திறவாய்
ஆழியான் அன்புடைமை ஆமாறும் இவ்வாறோ
ஊழி முதல்வனாய் நின்ற ஒருவனை
ஏழைபங் காளனையே பாடேலோர் எம்பாவாய்.

9. முன்னைப் பழம்பொருட்கு முன்னைப் பழம்பொருளே
பின்னைப் புதுமைக்கும் பேர்த்தும்அப் பெற்றியனே
உன்னைப் பிரானாகப் பெற்றஉன சீரடியோம்
உன்னடியார் தாள்பணிவோம் ஆங்குஅவர்க்கே பாங்காவோம்
அன்னவரே எம்கணவர் ஆவார் அவர்உகந்து
சொன்ன பரிசே தொழும்பாய்ப் பணிசெய்வோம்
இன்ன வகையே எமக்குஎங்கோன் நல்குதியேல்
என்ன குறையும் இலோம்ஏலோர் எம்பாவாய்.

10. பாதாளம் ஏழினும்கீழ் சொல்கழிவு பாதமலர்
போதார் புனைமுடியும் எல்லாப் பொருள்முடிவே
பேதை ஒருபால் திருமேனி ஒன்றல்லன்
வேதமுதல் விண்ணோரும் மண்ணும் துதித்தாலும்

ஓத உலவா ஒருதோழன் தொண்டர் உளன்
கோதில் குலத்து அரன் தன் கோயிற் பிணாப்பிள்ளைகாள்
ஏதவன்ஊர் ஏதவன்பேர் ஆர்உற்றார் ஆர்அயலார்
ஏதவனைப் பாடும் பரிசுஏலோர் எம்பாவாய்.

11. மொய்யார் தடம்பொய்கை புக்கு முகேர்என்னக்
கையால் குடைந்து குடைந்துஉன் கழல்பாடி
ஐயா வழியடியோம் வாழ்ந்தோங்காண் ஆரழல்போல்
செய்யாவெண் ணீருடி செல்வா சிறுமருங்குல்
மையார் தடங்கண் மடந்தை மணவாளா
ஐயாநீ ஆட்கொண் டருளும விளையாட்டின்
உய்வார்கள் உய்யும் வகையெல்லாம் உய்ந்தொழிந்தோம்
எய்யாமல் காப்பாய் எமைஏலோர் எம்பாவாய்.

12. ஆர்த்த பிறவித் துயர்கெடநாம் ஆர்த்தாடும்
தீர்த்தன்நல் தில்லைச்சிற் றம்பலத்தே தீயாடும்
கூத்தன் இவ் வானும் குவலயமும் எல்லோமும்
காத்தும் படைத்தும் கரந்தும் விளையாடி
வார்த்தையும் பேசி வளை சிலம்ப வார்கலைகள்
ஆர்ப்பரவம் செய்ய அணிகுழலமேல் வண்டு ஆர்ப்பப்
பூத்திகழும் பொய்கை குடைந்துஉடையான் பொற்பாதம்
ஏத்தி: இருஞ்சுனைநீர் ஆடேலோர் எம்பாவாய்.

13. பைங்குவளைக கார்மலரால் செங்கமலப் பைம்போதால்
அங்கம் குருகினததால் பின்னும் அரவத்தால்
தங்கள் மலம்கழுவு வார்வந்து சார்தலினால்
எங்கள் பிராட்டியும் எங்கோனும் போன்று இசைந்த
பொங்கு மடுவில புகப்பாய்ந்து பாய்ந்துநம்
சங்கம சிலம்பச் சிலம்பு கலந்துஆர்ப்பக்
கொங்கைகள் பொங்கக் குடையும் புனல்பொங்கப்
பங்கயப் பூமபுனலபாய்ந்து ஆடேலோர் எம்பாவாய்.

14. காதார் குழையாடப் பைம்பூண் கலனாடக்
கோதை குழலாட வண்டின் குழாமாடச்
சீதப் புனலாடிச் சிற்றம் பலம்பாடி
வேதப் பொருள்பாடி அப்பொருள் ஆ மாபாடிச்
சோதி திறம்பாடிச் சூழ்கொன்றைத் தார்பாடி
ஆதி திறம்பாடி அந்தம் ஆ மாபாடிப்
பேதித்து நம்மை வளர்த்தெடுத்த பெய்வளைதன்
பாதத் திறம்பாடி ஆடேலோர் எம்பாவாய்.

15. ஓரொருகால் எம்பெருமான் என்றென்றே நம்பெருமான்
சீரொருகால் வாய்ஓவாள் சித்தம் களிகூர
நீரொருகால் ஓவா நெடுந்தாரை கண்பனிப்பப்
பாரொருகால் வந்தனையாள் விண்ணோரைத்தான் பணியாள்
பேரரையற்கு இங்ஙனே பித்தொருவர் ஆமாறும்
ஆரொருவர் இவ்வண்ணம் ஆட்கொள்ளும் வித்தகர்தாள்
வாருருவப் பூண்முலையீர் வாயார நாம்பாடி
ஏருருவப் பூம்புனல்பாய்ந்து ஆடேலோர் எம்பாவாய்,

16. முன்னிக் கடலைச் சுருக்கி எழுந்துஉடையாள்
என்னத் திகழ்ந்துஎம்மை ஆளுடையாள் இட்டிடையின்
மின்னிப் பொலிந்துஎம் பிராட்டி திருவடிமேல்
பொன்னஞ் சிலம்பிற் சிலம்பித் திருப்புருவம்
என்னச் சிலைகுலவி நந்தம்மை ஆளுடையாள்
தன்னிற் பிரிவிலா எங்கோமான் அன்பர்க்கு
முன்னி அவள்நமக்கு முன்சுரக்கும் இன்னருளே
என்னப் பொழியாய் மழையேலோர் எம்பாவாய்.

17. செங்கணவன்பால் திசைமுகன்பால் தேவர்கள்பால்
எங்கும் இலாததோர் இன்பம்நம் பாலதாக்
கொங்குண் கருங்குழலி நந்தம்மைக் கோதாட்டி
இங்குநம் இல்லங்கள் தோறும் எழுந்தருளிச்

செங்கமலப் பொற்பாதம் தந்தருளும் சேவகனை
அங்கண் அரசை அடியோங்கட்கு ஆரமுதை
நங்கள் பெருமானைப் பாடி நலமதிகழப்
பங்கயப் பூம்புனல்பாய்ந்து ஆடேலோர் எம்பாவாய்.

18. அண்ணு மலையான் அடிக்கமலம் சென்று இறைஞ்சும்
விண்ணோர் முடியின் மணித்தொகைவீறு அற்றாற்போல்
கண்ணார் இரவி கதிர்வந்து கார்கரப்பத்
தண்ணார் ஒளிமழுங்கித் தாரகைகள் தாம் அகலப்
பெண்ணாகி ஆணாய் அலியாய்ப் பிறங்குஒலிசேர்
விண்ணாகி மண்ணாகி இத்தனையும் வேறாகிக்
கண்ணார் அமுதமுமாய் நின்றான் கழல்பாடிப்
பெண்ணே இப் பூம்புனல்பாய்ந்து ஆடேலோர் எம்பாவாய்

19. உன்கையிற் பிள்ளை உனக்கே அடைக்கலமென்று
அங்கு அப் பழஞ்சொற் புதுக்கும்எம் அச்சத்தால்
எங்கள் பெருமான் உனக்கொன்று உரைப்போம்கேள்
எங்கொங்கை நின்னன்பர் அல்லார்தோள் சேரற்க
எங்கை உனக்கல்லாது எப்பணியும் செய்யற்க
கங்குல் பகல்எம்கண் மற்றொன்றும் காணற்க
இங்குஇப் பரிசே எமக்குஎங்கோன் நல்குதியேல்
எங்கு எழிலென் ஞாயிறு எமக்குஏலோர் எம்பாவாய்

20 போற்றி அருளுகநின் ஆதியாம் பாதமலர்
போற்றி அருளுகநின் அந்தமாம் செந்தளிர்கள்
போற்றிஎல் லாஉயிர்க்கும் தோற்றமாம் பொற்பாதம்
போற்றிஎல் லாஉயிர்க்கும் போகமாம் பூங்கழல்கள்
போற்றிஎல் லாஉயிர்க்கும ஈறுஆம் இணையடிகள்
போற்றிமால் நான்முகனும் காணாத புண்டரிகம்
போற்றியாம் உய்யஆட் கொண்டருளும் பொன்மலர்கள்
போற்றியாம் மார்கழிநீர் ஆடேலோர் எம்பாவாய்

திருச்சிற்றம்பலம்

சிவமயம்

திருப்பள்ளி எழுச்சி

திருச்சிற்றம்பலம்

1. போற்றிஎன் வாழ்முதல் ஆகிய பொருளே
புலர்ந்தது பூங்கழற்கு இணைதுணை மலர்கொண்டு
ஏற்றிநின் திருமுகத்து எமக்கருள் மலரும்
எழில்நகை கண்டுநின் திருவடி தொழுகோம்
சேற்றிதழ்க் கமலங்கள் மலருந்தண் வயல்சூழ்
திருப்பெருந் துறையுறை சிவபெரு மானே
ஏற்றுயர் கொடியுடை யாய்எமை யுடையாய்
எம்பெரு மான் பள்ளி எழுந்தரு ளாயே.

2. அருணன் இந்திரன் திசை அணுகினன் இருள்போய்
அகன்றது உதயம்நின் மலர்த்திரு முகத்தின்
கருணையின் சூரியன் எழஎழ நயனக்
கடிமலர் மலரமற்று அண்ணல்அங் கண்ணாம்
திரள்நிரை அறுபதம் முரல்வன இவைஓர்
திருப்பெருந் துறையுறை சிவபெரு மானே
அருள்நிதி தரவரும் ஆனந்த மலையே
அலைகடலே பள்ளி எழுந்தரு ளாயே.

3. கூவின பூங்குயில் கூவின கோழி
குருகுகள் இயம்பின இயம்பின சங்கம்
ஓவின தாரகை ஒளி ஒளி உதயத்து
ஒருப்படு கின்றது விருப்பொடு நமக்குத்
தேவநற் செறிகழல் தாளிணை காட்டாய்
திருப்பெருந் துறையுறை சிவபெரு மானே
யாவரும் அறிவரி யாய்எமக்கு எளியாய்
எம்பெரு மான் பள்ளி எழுந்தரு ளாயே.

4. இன்னிசை வீணையர் யாழினர் ஒருபால்
இருக்கொடு தோத்திரம் இயம்பினர் ஒருபால்
துன்னிய பிணைமலர்க் கையினர் ஒருபால்
தொழுகையர் அழுகையர் துவள்கையர் ஒருபால்
சென்னியில் அஞ்சலி கூப்பினர் ஒருபால்
திருப்பெருந் துறையுறை சிவபெரு மானே
என்னையும் ஆண்டுகொண்டு இன்னருள் புரியும்
எம்பெரு மான் பள்ளி எழுந்தருளாயே.

5. பூதங்கள் தோறும்நின் றாய்எனின் அல்லால்
போக்கிலன் வரவிலன் எனநினைப் புலவோர்
கீதங்கள் பாடுதல் ஆடுதல் அல்லால்
கேட்டறி யோம்உனைக் கண்டறி வாரைச்
சீதங்கொள் வயல்திருப் பெருந்துறை மன்னா
சிந்தனைக் கும்அரி யாய்எங்கள் முன்வந்து
ஏதங்கள் அறுத்தெமை ஆண்டருள் புரியும்
எம்பெரு மான் பள்ளி எழுந்தருளாயே.

6. பப்பற வீட்டிருந்து உணரும்நின் அடியார்
பந்தனை வந்தறுத் தார்அவர் பலரும்
மைப்புறு கண்ணியர் மானுடத்து இயல்பின்
வணங்குகின் றார்அணங் கின்மண வாளா
செப்புறு கமலங்கள் மலருந்தண் வயல்சூழ்
திருப்பெருந் துறையுறை சிவபெருமானே
இப்பிறப்பு அறுத்துஎமை ஆண்டருள் புரியும்
எம்பெரு மான் பள்ளி எழுந்தரு ளாயே.

7. அதுபழச் சுவைஎன அமுதென அறிதற்கு
அரிதென எளிதென அமரரும் அறியார்
இதுஅவன் திருவுரு இவன்அவன் எனவே
எங்களை ஆண்டுகொண்டு இங்குஎழுந் தருளும்

மதுவளர் பொழில்திரு உததரா கோச
மங்கையுள் ளாய்திருப் பெருந்துறை மன்னு
எதுஎமைப் பணிகொளும ஆறு அது கேட்போம்
எம்பெரு மான பள்ளி எழுந்தரு ளாயே.

8. முந்திய முதல்நடு இறுதியும் ஆனுய்
மூவரும் அறிகிலா யாவர்மற்று அறிவார்
பந்தணை விரலியும நீயுமநின் அடியார்
பழங்குடில் தொறுமஎழுந் தருளிய பரனே
செந்தழல் புரைதிரு மேனியும காட்டித்
திருப்பெருந் துறையுறை கோயிலும் காட்டி
அந்தண னுவதும் காட்டிவந் தாண்டாய்
ஆரமு தே பள்ளி எழுந்தரு ளாயே.

9, விண்ணகத் தேவரும் நணணவும் மாட்டா
விழுப்பொரு ளேஉன தொழுப்படி யோங்கள்
மண்ணகத் தேவந்து வாழச்செய் தானே
வண்திருப் பெருந்துறை யாய்வழி யடியோம்
கண்ணகத் தேநின்று களிதரு தேனே
கடலமு தேகரும் பேவிரும படியார்
எண்ணகத் தாய்உல குக்குஉயி ராஞய்
எம்பெரு மான பள்ளி எழுந்தரு ளாயே.

10 புவனியில் போய்ப்பிற வாமையில் நாள்நாம்
போக்குகின் றோம்அவ மேஇந்தப் பூமி
சிவனஉய்யக் கொள்கின்ற வாறுஎனறு நோக்கித்
திருப்பெருந் துறைஉறை வாய்திரு மாலாம்
அவன்விருப்பு எய்தவும் அலரவன் ஆசைப்
படவும்நின் அலர்ந்தமெய்க் கருணையும் நீயும்
அவனியில் புகுந்துஎமை ஆட்கொள வல்லாய்
ஆரமு தே பள்ளி எழுந்தரு ளாயே.

திருச்சிற்றம்பலம்

உ

சிவமயம்

திருவாசகம்

பகுதி எண்—3

விநாயகர் காப்பு

ஐந்து கரத்தனை யானை முகத்தனை
இந்தின் இளம்பிறை போலும் எயிற்றனை
நந்தி மகன்றனை ஞானக் கொழுந்தினைப்
புந்தியில் வைத்து அடி போற்றுகின் றேனே.

பகுதி எண்—4

சிவபுராணம்

நமச்சிவாய வா அழ்க நாதன் தாள் வாழ்க
இமைப்பொழுதும் என்நெஞ்சில் நீங்காதான் தாள்வாழ்க
கோகழி ஆண்ட குருமணிதன் தாள்வாழ்க
ஆகம மாகிநின்று அண்ணிப்பான் தாள்வாழ்க
ஏகன் அநேகன் இறைவன் அடிவாழ்க
வேகம் கெடுத்தாண்ட வேந்தன் அடி வெல்க
பிறப்பறுக்கும் பிஞ்ஞகன்தன் பெய்கழல்கள் வெல்க
புறத்தார்க்குச் சேயோன்தன் பூங்கழல்கள் வெல்க
கரம்குவிவார் உள்மகிழும் கோன்கழல்கள் வெல்க
சிரம்குவிவார் ஓங்குவிக்கும் சீரோன் கழல்வெல்க

ஈசன் அடிபோற்றி எந்தை அடிபோற்றி
தேசன் அடிபோற்றி சிவன்சே வடிபோற்றி
நேயத்தே நின்ற நிமலன் அடிபோற்றி
மாயப் பிறப்பறுக்கும் மன்னன் அடிபோற்றி
சீரார் பெருந்துறைநம் தேவன் அடிபோற்றி
ஆராத இன்பம் அருளுமலை போற்றி
சிவன் அவன்என் சிந்தையுள் நின்ற அதனால்
அவன் அரு ளாலே அவன்தாள் வணங்கிச்
சிந்தை மகிழச் சிவபுரா ணந்தன்னை
முந்தை வினைமுழுதும் ஓய உரைப்பன்யான்

கண்ணுதலான் தன்கருணைக் கண்காட்ட வந்தெய்தி
எண்ணுதற்கு எட்டா எழிலார் கழல்இறைஞ்சி
விண்ணிறைந்து மண்ணிறைந்து மிக்காய் விளங்கொளியாய்
எண்ணிறைந்து எல்லை இலாதானே நின்பெருஞ்சீர்
பொல்லா வினையேன் புகழுமாறு ஒன்றறியேன்
புல்லாகிப் பூடாய்ப் புழுவாய் மரமாகிப்
பல்விருக மாகிப் பறவையாய்ப் பாம்பாகிக்
கல்லாய் மனிதராய்ப் பேயாய்க் கணங்களாய்
வல்லசுர ராகி முனிவராய்த் தேவராய்ச்
செல்லாஅ நின்றஇத் தாவர சங்கமத்துள்

எல்லாப் பிறப்பும் பிறந்திளைத்தேன் எம்பெருமான்
மெய்யேஉன் பொன்னடிகள் கண்டின்று வீடுற்றேன்
உய்யஎன் உள்ளத்துள் ஓங்கார மாய்நின்ற
மெய்யா விமலா விடைப்பாகா வேதங்கள்
ஐயா என ஓங்கி ஆழ்ந்து அகன்ற நுண்ணியனே
வெய்யாய் தணியாய் இயமான னாம்விமலா
பொய்யா யினஎல்லாம் போயகல வந்தருளி
மெய்ஞ்ஞான மாகி மிளிர்கின்ற மெய்ச்சுடரே
எஞ்ஞானம் இல்லாதேன் இன்பப் பெருமானே
அஞ்ஞானம் தன்னை அகல்விக்கும் நல்லறிவே

ஆக்கம் அளவுஇறுதி இல்லாய் அனைத்துலகும்
ஆக்குவாய் காப்பாய் அழிப்பாய் அருள்தருவாய்
போக்குவாய் என்னைப் புகுவிப்பாய் நின்தொழும்பில்
நாற்றத்தின் நேரியாய் சேயாய் நணியானே
மாற்றம் மனங்கழிய நின்ற மறையோனே
கறந்தபால் கன்னலொடு நெய்கலந்தாற் போலச்
சிறந்தடியார் சிந்தனையுள் தேனூறி நின்று
பிறந்த பிறப்பறுக்கும் எங்கள் பெருமான்
நிறங்கள்ஓர் ஐந்துடையாய் விண்ணோர்கள் ஏத்த
மறைந்திருந்தாய் எம்பெருமான் வல்வினையேன் தன்னை

மறைந்திட மூடிய மாய இருளை
அறம்பாவம் என்னும் அருங்கயிற்றால் கட்டிப்
புறந்தோல் போர்த்துஎங்கும் புழுஅழுக்குமூடி
மலஞ்சோரும் ஒன்பது வாயிற் குடிலை
மலங்கப் புலனைந்தும் வஞ்சனையைச் செய்ய
விலங்கு மனத்தால் விமலா உனக்குக்
கலந்த அன் பாகிக் கசிந்துள் உருகும்
நலந்தான் இலாத சிறியேற்கு நல்கி
நிலந்தன்மேல் வந்தருளி நீள்கழல்கள் காஅட்டி
நாயிற் கடையாய்க் கிடந்த அடியேற்குத்
தாயிற் சிறந்த தயாவான தத்துவனே
மாசற்ற சோதி மலர்ந்த மலர்ச்சுடரே
தேசனே தேன்ஆர் அமுதே சிவபுரனே
பாசமாம் பற்றறுத்துப் பாரிக்கும் ஆரியனே
நேச அருள்புரிந்து நெஞ்சில்வஞ் சங்கெடப்
பேராது நின்ற பெருங்கருணைப் பேராறே
ஆரா அமுதே அளவிலாப் பெம்மானே
ஓராதார் உள்ளத்து ஒளிக்கும ஒளியானே
நீராய் உருக்கிஎன் ஆருயிராய் நின்றானே
இன்பமும் துன்பமும் இல்லானே உள்ளானே
அன்பருக்கு அன்பனே யாவையுமாய் அல்லையுமாம்
சோதியனே துன்னிருளே தோன்றாப் பெருமையனே
ஆதியனே அந்தம் நடுவாகி அல்லானே
ஈர்த்துஎன்னை ஆட்கொண்ட எந்தை பெருமானே
கூர்த்தமெய்ஞ் ஞானத்தால் கொண்டுணர்வார் தம்கருத்தின்
நோக்கரிய நோக்கே நுணுக்கரிய நுண்ணுணர்வே
போக்கும் வரவும் புணாவுமிலாப் புண்ணியனே
காக்கும்எம் காவலனே காண்பரிய பேரொளியே
ஆற்றின்ப வெள்ளமே அத்தாமிக் காய்நின்ற
தோற்றச் சுடரொளியாய்ச் சொல்லாத நுண்ணுணர்வாய்

மாற்றமாம் வையகத்தின் வெவ்வேறே வந்து அறிவாம்
தேற்றனே தேற்றத் தெளிவேஎன் சிந்தனையுள்
ஊற்றான உண்ணார் அமுதே உடையானே
வேற்று விகார விடக்குடம்பின் உட்கிடப்ப
ஆற்றேன்எம் ஐயா அரனேஓ என்றென்று
போற்றிப் புகழ்ந்திருந்து பொய்கெட்டு மெய்யானார்
மீட்டுஇங்கு வந்து வினைப்பிறவி சாராமே
கள்ளப் புலக்குரம்பை கட்டழிக்க வல்லானே
நள்ளிருளில் நட்டம் பயின்றாடும் நாதனே
தில்லையுட் கூத்தனே தென்பாண்டி நாட்டானே
அல்லற் பிறவி அறுப்பானே ஓஎன்று
சொல்லற்கு அரியானைச் சொல்லித் திருவடிக்கீழ்ச்
சொல்லிய பாட்டின் பொருள்உணர்ந்து சொல்லுவார்
செல்வர் சிவபுரத்தின் உள்ளார் சிவனடிக்கீழ்ப்
பல்லோரும் ஏத்தப் பணிந்து.

திருச்சிற்றம்பலம்

பகுதி எண் – 5


திருமந்திரம்

திருவம்பலச்சக்கரம்

1. மகாரம் நடுவே வளைத்திடும் சத்தியை
ஓகாரம் வளைத்திட்டும் பிளந்து ஏற்றி
அகாரம் தலையாய் இருகண் சிகாரமாய்
நகார வகாரம் நற்காலது நாடுமே

2. நாடும் பிரணவ நடுவுஇரு பக்கமும்
ஆடும் அவர்வாய் அமர்ந்தங்கு நின்றது
நாடு நடுவுள் முகநம சிவாய
ஆடும் சிவாயநம புறவட்டத்து ஆயதே

3. ஆயும் சிவாய நமமசி வாயந
ஆயும் நமசிவா யயநம சிவாயந
ஆயுமே வாய நமசியெனும் மந்திரம்
ஆயும் சிகாரம் தொட்டுஅந்தத்து அடைவிலே



திருமந்திரம், திருவம்பலச் சக்கரம் 921

திருமந்திரம்

4. எங்கும் திருமேனி எங்கும் சிவசத்தி
எங்கும் சிதம்பரம் எங்கும் திருநட்டம்
எங்கும் சிவமாய் இருத்தலால் எங்குஎங்கும்
தங்கும் சிவன் அருள் தன்விளை யாட்டதே

5. சிற்பரஞ் சோதி சிவானந்தக் கூத்தனைச்
சொற்பதம் ஆம் அந்தச் சுந்தரக் கூத்தனைப்
பொற்பதிக் கூத்தனைப் பொன்தில்லைக் கூத்தனை
அற்புதக் கூத்தனை யார் அறி வாரே.

6. வேதங்கள் ஆட மிகு ஆகமம் ஆடக்
கீதங்கள் ஆடக் கிளர் அண்டம் ஏழ் ஆடப்
பூதங்கள் ஆடப் புவனம் முழுது ஆட
நாதம்கொண்டு ஆடினான் ஞானானந்தக் கூத்தே.

7. உம்பரிற் கூத்தனை உத்தமக் கூத்தனைச்
செம்பொன் திருமன்றுட் சேவகக் கூத்தனைச்
சம்பந்தக் கூத்தனைத் தற்பரக் கூத்தனை
இன்புற நாடிஎன் அன்பில் வைத் தேனே.

8. மாணிக்கக் கூத்தனை வண்தில்லைக் கூத்தனைப்
பூண்உற்ற மன்றுஉட் புரிசடைக் கூத்தனைச்
சேண்உற்ற சோதிச் சிவானந்தக் கூத்தனை
ஆணிப்பொற் கூத்தனை யார் உரைப் பாரே

9. காளியோடு ஆடிக் கனகாசலத்து ஆடி
கூளியோடு ஆடிக் குவலயத்தே ஆடி
நீடிய நீர்தீகரல் நீள்வான்இடை ஆடி
நாள்உற அம்பலத்தே ஆடும் நாதனே

10. ஆதி பரன்ஆட அங்கைக் கனல்ஆட
ஓதும் சடைஆட உன்மத்தம் முற்றாடப்
பாதி மதிஆடப் பாரண்டம் மீது ஆட
நாதமோடு ஆடினான் நாதாந்த நட்டமே.

11 ஆடிய காலும் அதிர்சிலம்பு ஓசையும்
பாடிய பாட்டும் பலவான நட்டமும்
கூடிய கோலம் குருபரன் கொண்டாடத்
தேடியுள்ளே கண்டு தீர்ந்து அற்ற வாறே

12. அம்பலம் ஆவது அகில சராசரம்
அம்பலம் ஆவது ஆதிப் பிரான் அடி
அம்பலம் ஆவது அப்புத்தீ மணடலம்
அம்பலம் ஆவது அஞ்செழுத்து ஆகும்.

13. தத்துவம் ஆடச் சதாசிவந்தான் ஆடச்
சித்தமும் ஆடச் சிவசத்திதான் ஆட
வைத்த சராசரம் ஆடமறை ஆட
அத்தனும் ஆடினன் ஆனந்தக் கூத்தே.

இறைவி

14. ஓங்காரி என்பாள் அவள்ஒரு பெண்பிள்ளை
நீங்காத பச்சை நிறத்தை உடையவள்
ஆங்காரி ஆகிய ஐவரைப் பெற்றுஇட்டு
ரீங்காரத்து உள்ளே இனிதுஇருந் தாளே

திருமகள்

15. ஆரே திருவின் திருவடி காண்பார்கள்
நேரேநின்று ஓதி நினையவும் வல்லார்க்குக்
காரேர் குழலி கமல மலர்அன்ன
சீரேயும் சேவடி சிந்தைவைத் தாளே.

கலைமகள்

16. ஏடங்கை நங்கை இறைஎங்கள் முக்கண்ணி
வேடம் படிகம் விரும்பும் வெண்தாமரை
பாடும் திருமுறை பார்ப்பதி பாதங்கள்
சூடுமின் சென்னிவாய்த் தோத்திரம் சொல்லுமே.

முருகன்

17. ஆறு முகத்தில் அதிபதி நான்என்றுங்
கூறு சமயக் குருபரன் நான்என்றும்
தேறினர் தெற்குத் திரு அம்பலத்துள்ளே
வேறுஇன்றி அண்ணல் விளங்கி நின்றானே.

திருச்சிற்றம்பலம்

தோடுஉடைய செவியன் விடையேறி ஓர்தூவெண் மதிசூடிக்
காடுஉடைய சுடலைப் பொடிபூசி என்னுள்ளம் கவர்கள்வன்
ஏடுஉடைய மலரால் முனைநாம் பணிந்துஏத்த அருள்செய்த
பீடுஉடைய பிரமா புரம்மேவிய பெம்மான் இவன் அன்றே
[சம்பந்தர்]

2. ஓதி யாரும்அறிவார் இல்லை ஓதிஉலகுஎலாம்
சோதியாய் நிறைந்தான் சுடர் சோதியுட் சோதியான்
வேதியாகி விண்ணாகி மண்ணோடு ஏறி காற்றுமாய்
ஆதியாகி நின்றானும் ஐயா றுடை ஐயனே
[சம்பந்தர்]

3. காத லாகி, கசிந்து, கண் நீர்மல்கி,
ஓது வார்தமை நன்னெறிக்கு உய்ப்பது ;
வேதம் நான்கினும் மெய்ப்பொருள் ஆவது ;
நாதன் நாமம், நமச்சி வாயவே.
[சம்பந்தர்]

4. கருவாய்க் கிடந்துஉன் கழலே நினையும் கருத்து உடையேன்
உருவாய்த் தெரிந்து உன்தன்நாமம் பயின்றேன் உனது அருளால்
திருவாய் பொலியச் "சிவாயநம" என்று நீறு அணிந்தேன்
தருவாய் சிவகதிநீ பாதிரிப்புலியூர் அரனே
[அப்பர்]

5. மாசில் வீணையும் மாலை மதியமும்
வீசு தென்றலும் வீங்கிள வேனிலும்
மூசு வண்டறை பொய்கையும் போன்றதே
ஈசன் எந்தை இணையடி நீழலே
[அப்பர்]

6. வடிவேறு திரிசூலம் தோன்றும் தோன்றும் வளர்சடைமேல்
இளமதியம்தோன்றும் தோன்றும்
கடியேறு கமழ்கண்ணிக் கொன்றை தோன்றும் காதில்வெண்
குழை-தோடு கலந்து தோன்றும்
இடியேறு களிற்றுஉரிவைப் போர்வை தோன்றும் எழில்திகழும்
திருமுடியும் இலங்கித் தோன்றும்
பொடியேறு திருமேனி பொலிந்து தோன்றும் பொழில்திகழும்
பூவணத்துஎம் புனிதனார்க்கே.
[அப்பர்]

திருமுறை –7 (தேவாரம்)

7. பொன்னும் மெய்ப்பொருளும் தருவானைப் போகமும்திருவும்
புணர்ப்பானை
பின்னை என்பிழையைப் பொறுப்பானைப் பிழையெலாம்தவிரப்
பணிப்பானை
இன்ன தன்மையன் என்று அறியொண்ணு எம்மானைஎளிவந்த
பிரானை
அன்னம் வைகும் வயற்பழனத்து அணி ஆரூரானை மறக்கலும்ஆமே.
[சுந்தரர்]

திருமுறை—8 (திருவாசகம்)

நானேயோ தவம்செய்தேன் சிவாயநம எனப்பெற்றேன்
தேனாய்இன் அமுதமாய்த் தித்திக்கும் சிவபெருமான்
தானேவந்து எனதுஉள்ளம் புகுந்து அடியேற்கு அருள்செய்தான்
ஊன் ஆரும் உயிர்வாழ்க்கை ஒறுத்து அன்றே வெறுத்திடவே
[மணிவாசகர்]

திருமுறை –8 (திருக்கோவையார்)

சிறைவான் புனற்றில்லைச் சிற்றம்பலத்தும் என்சிந்தையுள்ளும்
உறைவான் உயர்மதிற் கூடலின் ஆய்ந்தவொண் தீந்தமிழின்
துறைவாய் நுழைந்தனையோ அன்றி ஏழிசைச்சூழல் புக்கோ
இறைவா தடவரைத் தோட்கு என்கொலாம்புகுந்து எய்தியதே.
[மணிவாசகர்]

திருமுறை—9 (திருவிசைப்பா)

ஒளிவளர் விளக்கே உவப்பிலா ஒன்றே உணர்வுசூழ் கடந்ததோர்
உணர்வே
தெளிவளர் பளிங்கின் திரள்மணிக் குன்றே சித்தத்துள் தித்திக்கும்
தேனே
அளிவளர் உள்ளத்து ஆனந்தக் கனியே அம்பலம் ஆடரங்காக
வெளிவளர் தெய்வக் கூத்து உகந்தாயைத் தொண்டனேன்
விளம்புமாறு விளம்பே

திருமுறை—9 (திருப்பல்லாண்டு)

சொல்லாண்ட சுருதிப்பொருள் சோதித்த தூய்மனத்தொண்டர் உள்ளீர்
சில்லாண்டிற் சிதையும் சிறுதேவர் சிறுநெறி சேராமே
வில்லாண்ட கனகத்திரள் மேருவில்விடங்கன் விடைப்பாகன்
பல்லாண்டு என்றும் பதங்கடந்தானுக்கே பல்லாண்டு கூறுதுமே,

[சேந்தனார்]

திருமுறை--10 (திருமந்திரம்)

தேவர் உறைகின்ற சிற்றம்பலம் என்றும்
தேவர் உறைகின்ற சிதம்பரம் என்றும்
தேவர் உறைகின்ற திரு அம்பலம் என்றும்
தேவர் உறைகின்ற தென்பொது வாமே

[திருமூலர்]

திருமுறை—11

வானத்தான் என்பாரும் என்கமற்று உம்பர்கோன்
தானத்தான் என்பாரும் தாம்என்க—ஞானத்தான்
முன்நஞ்சத்தால் இருண்ட மெய்யொளிசேர் கண்டத்தான்
என்நெஞ்சத் தான் என்பன் யான்,

[காரைக்கால் அம்மையார்]

திருமுறை –12 (பெரியபுராணம்)

தெள்நிலா மலர்ந்த வேணியாய் உன்தன்
    திருநடம் கும்பிடப் பெற்று
மண்ணிலே வந்த பிறவியே எனக்கு
    வாலிதாம் இன்பமாம் என்று
கண்ணில் ஆனந்த அருவிநீர் சொரியக்
    கைமலர் உச்சிமேல் குவித்துப்
பண்ணினால் நீடி அறிவரும் பதிகம்
    பாடினார், பரவினார், பணிந்தார்.

[சேக்கிழார்]

ஜெபம்

சிவ சிவ சிவ சிவ சிவாய நம:
ஹரஹர ஹரஹர நமசிவாய

சிவாய நம ஓம் சிவாய நம:
சிவாய நம ஓம் நமசிவாய.

சிவ சிவ சிவ சிவ சிவாய நம:
ஹரஹர ஹரஹர நமசிவாய

மௌனம் — நிமிடம் 2 முதல் 5 வரை.

பகுதி எண் - 7

55. கயிலாயம் : போற்றித் திருத்தாண்டகம்

திருச்சிற்றம்பலம்

வேற்றாகி விண்ணாகி நின்றாய் போற்றி
மீளாமே ஆளென்னைக் கொண்டாய் போற்றி
ஊற்றாகி உள்ளே ஒளித்தாய் போற்றி
ஓவாத சத்தத் தொலியே போற்றி
ஆற்றாகி அங்கே அமர்ந்தாய் போற்றி
ஆறங்கம் நால்வேத மானாய் போற்றி
காற்றாகி யெங்குங் கலந்தாய் போற்றி
கயிலை மலையானே போற்றி போற்றி.

பிச்சாடல் பேயோ டுகந்தாய் போற்றி
பிறவி யறுக்கும் பிரானே போற்றி
வைச்சாடல் நன்று மகிழ்ந்தாய் போற்றி
மருவியென் சிந்தை புகுந்தாய் போற்றி
பொய்ச்சார் புரமூன்று மெய்தாய் போற்றி
போகாதென் சிந்தை புகுந்தாய் போற்றி
கச்சாக நாக மசைத்தாய் போற்றி
கயிலை மலையானே போற்றி போற்றி.

மருவார் புரமூன்று மெய்தாய் போற்றி
மருவியென் சிந்தை புகுந்தாய் போற்றி
உருவாகி யென்னைப் படைத்தாய் போற்றி
யுள்ளாவி வாங்கி யொளித்தாய் போற்றி
திருவாகி நின்ற திறமே போற்றி
தேசம் பரவப் படுவாய் போற்றி
கருவாகி யோடும் முகிலே போற்றி
கயிலை மலையானே போற்றி போற்றி.

வானத்தார் போற்றும் மருந்தே போற்றி
வந்தென்றன் சிந்தை புகுந்தாய் போற்றி
ஊனத்தை நீக்கும் உடலே போற்றி
ஓங்கி அழலாய் நிமிர்ந்தாய் போற்றி
தேனத்தை வார்த்த தெளிவே போற்றி
தேவர்க்குந் தேவனாய் நின்றாய் போற்றி
கானத்தி யாட லுகந்தாய் போற்றி
கயிலை மலையானே போற்றி போற்றி.

ஊராகி நின்ற உலகே போற்றி
ஓங்கி அழலாய் நிமிர்ந்தாய் போற்றி
பேராகி யெங்கும் பரந்தாய் போற்றி
பெயராதென் சிந்தை புகுந்தாய் போற்றி
நீராவி யான நிழலே போற்றி
நேர்வா ரொருவரையு மில்லாய் போற்றி
காராகி நின்ற முகிலே போற்றி
கயிலை மலையானே போற்றி போற்றி.

சில்லுருவாய்ச் சென்று திரண்டாய் போற்றி
தேவ ரறியாத தேவே போற்றி
புல்லுயிர்க்கும் பூட்சி புணர்த்தாய் போற்றி
போகாதென் சிந்தை புகுந்தாய் போற்றி
பல்லுயிராய்ப் பார்தோறும் நின்றாய் போற்றி
பற்றி யுலகை விடாதாய் போற்றி
கல்லுயிராய் நின்ற கனலே போற்றி
கயிலை மலையானே போற்றி போற்றி.

பண்ணின் இசையாகி நின்றாய் போற்றி
பாவிப்பார் பாவம் அறுப்பாய் போற்றி
எண்ணும் எழுத்துஞ் சொல்லானாய் போற்றி
என்சிந்தை நீங்கா இறைவா போற்றி
விண்ணும் நிலனுந்தீ யானாய் போற்றி
மேலவர்க்கும் மேலாகி நின்றாய் போற்றி
கண்ணின் மணியாகி நின்றாய் போற்றி
கயிலை மலையானே போற்றி போற்றி

இமையா துயிரா யிருந்தாய் போற்றி
என்சிந்தை நீங்கா இறைவா போற்றி
உமைபாக மாகத் தணைத்தாய் போற்றி
ஊழி யேழான வொருவா போற்றி
அமையா வருநஞ்ச மார்ந்தாய் போற்றி
ஆதி புராணனாய் நின்றாய் போற்றி
கமையாகி நின்ற கனலே போற்றி
கயிலை மலையானே போற்றி போற்றி.

மூவாய் பிறவாய் இறவாய் போற்றி
முன்னமே தோன்றி முளைத்தாய் போற்றி
தேவாதி தேவர்தொழுந் தேவே போற்றி
சென்றேறி யெங்கும் பரந்தாய் போற்றி
ஆவா அடியேனுக் கெல்லாம் போற்றி
அல்லல் நலிய அலந்தேன் போற்றி
காவாய் கனகத் திரளே போற்றி
கயிலை மலையானே போற்றி போற்றி.

நெடிய விசும்பொடு கண்ணே போற்றி
நீள அகல முடையாய் போற்றி
அடியும் முடியு மிகலிப் போற்றி
யங்கொன் றறியாமை நின்றாய் போற்றி
கொடிய வன்கூற்றம் உதைத்தாய் போற்றி
கோயிலா என்சிந்தை கொண்டாய் போற்றி
கடிய உருமொடு மின்னே போற்றி
கயிலை மலையானே போற்றி போற்றி.

உண்ணா துறங்கா திருந்தாய் போற்றி
ஓதாதே வேத முணர்ந்தாய் போற்றி
எண்ணா இலங்கைக்கோன் தன்னைப் போற்றி
இறவிரலால் வைத்துகந்த ஈசா போற்றி
பண்ணா ரிசையின்சொற் கேட்டாய் போற்றி
பண்டேயென் சிந்தை புகுந்தாய் போற்றி
கண்ணா யுலகுக்கு நின்றாய் போற்றி
கயிலை மலையானே போற்றி போற்றி.

[திருச்சிற்றம்பலம்]

56. கயிலாயம்: போற்றித் திருத்தாண்டகம்

திருச்சிற்றம்பலம்

பொறையுடைய பூமிநீ ரானாய் போற்றி
பூதப் படையாள் புனிதா போற்றி
நிறையுடைய நெஞ்சி னிடையாய் போற்றி
நீங்காதென் னுள்ளத் திருந்தாய் போற்றி
மறையுடைய வேதம் விரித்தாய் போற்றி
வானோர் வணங்கப் படுவாய் போற்றி
கறையுடைய கண்ட முடையாய் போற்றி
கயிலை மலையானே போற்றி போற்றி

முன்பாகி நின்ற முதலே போற்றி
மூவாத மேனிமுக் கண்ணா போற்றி
அன்பாகி நின்றார்க் கணியாய் போற்றி
ஆறேறு சென்னிச் சடையாய் போற்றி
என்பாக எங்கும் அணிந்தாய் போற்றி
யென்சிந்தை நீங்கா இறைவா போற்றி
கண்பாவி நின்ற கனலே போற்றி
கயிலை மலையானே போற்றி போற்றி.

மாலை யெழுந்த மதியே போற்றி
மன்னியென் சிந்தை யிருந்தாய் போற்றி
மேலை வினைகள் அறுப்பாய் போற்றி
மேலாடு திங்கள் முடியாய் போற்றி
ஆலைக் கரும்பின் தெளிவே போற்றி
அடியார்கட் காரமுத மானாய் போற்றி
காலை முளைத்த கதிரே போற்றி
கயிலை மலையானே போற்றி போற்றி.

உடலின் வினைக ளறும்பாய் போற்றி
ஒள்ளொளி வீசும் பிரானே போற்றி
படருஞ் சடைமேல் மதியாய் போற்றி
பல்கணக் கூத்தப் பிரானே போற்றி
சுடரில் திகழ்கின்ற சோதி போற்றி
தோன்றியென் னுள்ளத் திருந்தாய் போற்றி
கடலில் ஒளியாய் முதலே போற்றி
கயிலை மலையானே போற்றி போற்றி

மைசேர்ந்த கண்ட முடையாய் போற்றி
மாலுக்கும் ஓராழி யீந்தாய் போற்றி
பொய்சேர்ந்த சிந்தை புகாதாய் போற்றி
போகாதென் னுள்ளத் திருந்தாய் போற்றி
மெய்சேரப் பால்வெண்ணீ ருடீ போற்றி
மிக்கார்க ளேத்தும் விளக்கே போற்றி
கைசே ரனலேந்தி யாடீ போற்றி
கயிலை மலையானே போற்றி போற்றி.

ஆறேறு சென்னி முடியாய் போற்றி
அடியார்கட் காரமுதாய் நின்றாய் போற்றி
நீறேறு மேனி யுடையாய் போற்றி
நீங்காதென் னுள்ளத் திருந்தாய் போற்றி
கூறேறு மங்கை மழுவா போற்றி
கொள்ளுங் கிழமையே ழானாய் போற்றி
காறேறு கண்ட மிடற்றாய் போற்றி
கயிலை மலையானே போற்றி போற்றி.

அண்டமே ழன்று கடந்தாய் போற்றி
ஆதி புராணனாய் நின்றாய் போற்றி
பண்டை வினைக ளறுப்பாய் போற்றி
பாரோர் விண்ணேத்தப் படுவாய் போற்றி
தொண்டர் பரவு மிடத்தாய் போற்றி
தொழில் நோக்கி யாளுஞ் சுடரே போற்றி
கண்டங் கறுக்கவும் வல்லாய் போற்றி
கயிலை மலையானே போற்றி போற்றி.

பெருகி யலைக்கின்ற ஆறே போற்றி
பேராநோய் பேர விடுப்பாய் போற்றி
உருகிநினை வார்தம் முள்ளாய் போற்றி
ஊனந் தவிர்க்கும் பிரானே போற்றி
அருகி மிளிர்கின்ற பொன்னே போற்றி
யாருமிகழப் படாதாய் போற்றி
கருகிப் பொழிந்தோடு நீரே போற்றி
கயிலை மலையானே போற்றி போற்றி.

செய்ய மலர் மேலான் கண்ணன் போற்றித்
தேடி யுணராமை நின்றாய் போற்றி
பொய்யாநஞ் சுண்ட பொறையே போற்றி
பொருளாக வென்னையாட் கொண்டாய் போற்றி
மெய்யாக ஆனஞ் சுகந்தாய் போற்றி
மிக்கார்க ளேத்துங் குணத்தாய் போற்றி
கையானை மெய்த்தோ லுரித்தாய் போற்றி
கயிலை மலையானே போற்றி போற்றி.

மேல்வைத்த வானோர் பெருமான் போற்றி
மேலாடு புரமூன்று மெய்தாய் போற்றி
சீலத்தான் தென்னிலங்கை மன்னன் போற்றிச்
சிலையெடுக்க வாயலற வைத்தாய் போற்றி
கோலத்தாற் குறைவில்லான் தன்னை யன்று
கொடிதாகக் காய்ந்த குழகா போற்றி
காலத்தாற் காலனையுங் காய்ந்தாய் போற்றி
கயிலை மலையானே போற்றி போற்றி.

திருச்சிற்றம்பலம்

57. கயிலாயம்: போற்றித் திருத்தாண்டகம்

திருச்சிற்றம்பலம்

பாட்டான நல்ல தொடையாய் போற்றி
பரிசை யறியாமை நின்ருய் போற்றி
சூட்டான திங்கள் முடியாய் போற்றி
தூமாலே மத்தம் அணிந்தாய் போற்றி
ஆட்டான அஞ்சும் அமர்ந்தாய் போற்றி
அடங்கார் புரமெரிய நக்காய் போற்றி
காட்டானே மெய்த்தோ லுரித்தாய் போற்றி
கயிலே மலேயானே போற்றி போற்றி.

அதிரா வினேகள் அறுப்பாய் போற்றி
ஆல நிழற்கீழ் அமர்ந்தாய் போற்றி
சதுரா சதுரக் குழையாய் போற்றி
சாம்பர் மெய்பூசுந் தலேவா போற்றி
எதிரா வுலகம் அமைப்பாய் போற்றி
யென்றும் மீளாவருள் செய்வாய் போற்றி
கதிரார் கதிருக்கோர் கண்ணே போற்றி
கயிலே மலேயானே போற்றி போற்றி.

செய்யாய் கரியாய் வெளியாய் போற்றி
செல்லாத செல்வ முடையாய் போற்றி
ஐயாய் பெரியாய் சிறியாய் போற்றி
ஆகாய வண்ண முடையாய் போற்றி
வெய்யாய் தணியாய் அணியாய் போற்றி
வேளாத வேள்வி யுடையாய் போற்றி
கையார் தழலார் விடங்கா போற்றி
கயிலே மலேயானே போற்றி போற்றி.

ஆட்சி யுலகை யுடையாய் போற்றி
அடியார்க் கமுதெலாம் ஈவாய் போற்றி
சூட்சி சிறிது மிலாதாய் போற்றி
சூழ்ந்த கடல்நஞ்ச முண்டாய் போற்றி
மாட்சி பெரிது முடையாய் போற்றி
மன்னியென் சிந்தை மகிழ்ந்தாய் போற்றி
காட்சி பெரிது மரியாய் போற்றி
கயிலை மலையானே போற்றி போற்றி.

முன்னியா நின்ற முதல்வா போற்றி
மூவாத மேனி யுடையாய் போற்றி
என்னியா யெந்தை பிரானே போற்றி
யேழி னிசையே யுகப்பாய் போற்றி
மன்னிய மங்கை மணாளா போற்றி
மந்திரமுந் தந்திரமு மானாய் போற்றி
கன்னியார் கங்கைத் தலைவா போற்றி
கயிலை மலையானே போற்றி போற்றி.

உரியா யுலகினுக் கெல்லாம் போற்றி
உணர்வென்னும் ஊர்வ துடையாய் போற்றி
எரியாய தெய்வச் சுடரே போற்றி
யேசுமா முண்டியுடையாய் போற்றி
அரியா யமரர்கட் கெல்லாம் போற்றி
அறிவே யடக்க முடையாய் போற்றி
கரியானுக் காழியன் றீந்தாய் போற்றி
கயிலை மலையானே போற்றி போற்றி

எண்மேலும் எண்ண முடையாய் போற்றி
யேறரிய வேறுங் குணத்தாய் போற்றி
பண்மேலே பாவித் திருந்தாய் போற்றி
பண்ணொடியாழ் வீணை பயின்றாய் போற்றி
விண்மேலும் மேலும் நிமிர்ந்தாய் போற்றி
மேலார்கள் மேலார்கள் மேலாய் போற்றி
கண்மேலுங் கண்ணொன் றுடையாய் போற்றி
கயிலை மலையானே போற்றி போற்றி.

முடியார் சடையின் மதியாய் போற்றி
முழுநீறு சண்ணித்த மூர்த்தி போற்றி
துடியா ரிடையுமையாள் பங்கா போற்றி
சோதித்தார் காணாமை நின்றாய் போற்றி
அடியார் அடிமை அறிவாய் போற்றி
அமரர் பதியாள வைத்தாய் போற்றி
கடியார் புரமூன்று மெய்தாய் போற்றி
கயிலை மலையானே போற்றி போற்றி.

போற்றிசைத்துன் னடிபரவ நின்றாய் போற்றி
புண்ணியனே நண்ண லரியாய் போற்றி
ஏற்றிசைக்கும் வான்மே லிருந்தாய் போற்றி
எண்ணா யிரநூறு பெயராய் போற்றி
நாற்றிசைக்கும் விளக்காய நாதா போற்றி
நான்முகற்கும் மாற்கும் அரியாய் போற்றி
காற்றிசைக்குந் திசைக்கெல்லாம் வித்தே போற்றி
கயிலை மலையானே போற்றி போற்றி.

திருச்சிற்றம்பலம்

பகுதி எண்—8

சிவமயம்

திருச்சிற்றம்பலம்

புஷ்பாஞ்சலி

குனித்த புருவமும் கொவ்வைச் செவ்வாயிற் குமிண் சிரிப்பும்
பனித்த சடையும் பவளம்போல் மேனியிற் பால்வெண்ணீறும்
இனித்தம் உடைய எடுத்த பொற்பாதமும் காணப்பெற்ருல்
மனித்தப் பிறவியும் வேண்டுவதே இந்த மானிலத்தே

—அப்பர்

குறைவிலா நிறைவே கோதிலா அமுதே
ஈறிலாக் கொழுஞ் சுடர்க் குன்றே
மறையுமாய் மறையின் பொருளுமாய் வந்துஎன்
மனத்திடை மன்னிய மன்னே
சிறைபெரு நீர்போல் சிந்தைவாய்ப் பாயும்
திருப்பெருந் துறையுறை சிவனே
இறைவனே நீயென் உடலிடங் கொண்டாய்
இனியுன்னை என்னிரக் கேனே.

—மணிவாசகர்

பண்ணின் இசையாகி நின்ருய் போற்றி
பாவிப்பார் பாவம் அறுப்பாய் போற்றி
எண்ணும் எழுத்தும் சொல்லானுய் போற்றி
என்சிந்தை நீங்கா இறைவா போற்றி
விண்ணும் நிலனும்தீ யானுய் போற்றி
மேலவர்க்கும் மேலாகி நின்ருய் போற்றி
கண்ணின் மணியாகி நின்ருய் போற்றி
கயிலை மலையானே போற்றி போற்றி.

—அப்பர்

கைப்போது மலர்தூவிக் காதலித்து வானோர்கள்
முப்போதும் முடிசாய்த்துத் தொழநின்ற முதல்வனை
அப்போது மலர்தூவி ஐம்புலனும் அடக்கி
எப்போதும் இனியானை என்மனத்தே வைத்தேனே.

— அப்பர்

மண்பொருந்தி வாழ்பவர்க்கும் மாதீர்த்த வேதியர்க்கும்
விண்பொருந்து தேவர்க்கும் வீடுபேறாய் நின்றானை
பண்பொருந்த இசைபாடும் பழனம்சேர் அப்பனைஎன்
கண்பொருந்தும் போதத்தும் கைவிடநான் கடவேனே

— அப்பர்

திருப்பல்லாண்டு

குழல்ஒலி யாழ்ஒலி கூத்துஒலி ஏத்துஒலி எங்கும்
குழாம்பெருகி
விழவுஒலி விண்ணளவும் சென்று விம்மிமிகுதிரு வாரூரின்
மழவிடையாற்கு வழிவழி ஆளாய் மணம்செய் குடிப்பிறந்த
பழஅடியா ரொடுங்கூடி எம்மானுக்கே பல்லாண்டு கூறுதுமே.

—சேந்தனார்

ஆரார் வந்தார் அமரர் குழாத்தில் அணியுடை ஆதிரைநாள்
நாரா யணனொடு நான்முகன் அங்கி இரவியும் இந்திரனும்
தேரார் வீதியில் தேவர்குழாங்கள் திசையனைத்தும் நிறைந்து
பாரார் தொல்புகழ் பாடியும் ஆடியும் பல்லாண்டு கூறுதுமே.

— சேந்தனார்

நமப் பார்வதி பதயே
ஹர ஹர மஹாதேவா,

குவளைக் கண்ணி கூறன் காண்க
அவளுந் தானும் உடனே காண்க
பரமா னந்தப் பழங்கடல் அதுவே.

அண்ணா மலையெம் அண்ணா போற்றி
கண்ணார் அமுதக் கடலே போற்றி.

தென்னாடு உடைய சிவனே போற்றி
எந்நாட் டவர்க்கும் இறைவா போற்றி.

சிற்சபேசா
சிவசிதம்பரம்.